பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.25.10.2023

**அன்புடையீர்,**

பரமக்குடி நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நிகழும் சோபகிருது வருடம் புரட்டாசி–ஐப்பசி மாதம் 09ம் தேதி (26.10.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கீழ்க்காணும் பொருள் குறித்த அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**தலைவர்**
**பரமக்குடி நகர்மன்றம்**

| | |
|---|---|
| பொருள்.1 | **இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 5- ல் காந்திநகரில் உள்ள நகராட்சி தொடக்கப்பள்ளியில் உள்ள வகுப்பறைக் கட்டிடடம் மற்றும் சமையலறை கட்டிடம் ஆகியவை பெரும்பாலான இடங்களில் பழுதடைந்துள்ளது. கான்கிரீட் கூரைகள் மிகவும் பழுதடைந்து உடைந்துள்ளது. இதனால் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை உள்ளது. எனவே மேற்படி பள்ளிக்கட்டிடத்தையும், சமையலறை கட்டிடத்தையும் மராமத்து பணி செய்து தருமாறு அப்பள்ளி தலைமையாசிரியை மற்றும் அவ்வார்டு நகர்மன்ற உறுப்பினர் தெரிவித்ததைத் தொடர்ந்து மேற்படி பள்ளிக்குழந்தைகளின் பாதுகாப்பு நலன் கருதி மேற்படி பள்ளியின் மராமத்து பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.6,00,000/-க்கு நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.**<br>**<u>அலுவலகக் குறிப்பு.</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை கல்வி நிதியின் மூலம் மேற்கொள்ளலாம்.<br>**தீர்மானம் எண்.710, அனுமதிக்ககப்பட்டது** |
| பொருள்.2 | **இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 5- ல் காந்திநகர் 8-வது தெரு, 9-வது தெரு, 9-வது குறுக்குத்தெரு மற்றும் கடைசி தெரு ஆகியவற்றில் மழைநீர்வடிகால் இல்லாத காரணத்தாலும் மற்றும் சிறுபாலங்கள் இல்லாத காரணத்தாலும் சாலையில் மழைநீரோடு கழிவுநீர் தேங்கி குளம் போல் காட்சியளிக்கிறது. இதனால் பொதுமக்கள் அப்பகுதியில் நடந்து செல்வதற்கே சிரமப்படுகின்றனர். மேலும் கழிவுநீர் செல்வதற்கு வெட்டி வைத்துள்ள பள்ளங்களில் விழுந்து விடுகின்றனர். தற்போது KNM( 2023-24)திட்டத்தில் மேற்படி பகுதிகளில் தற்சாலைகள் அமைக்கப்படவுள்ளது. மழைநீர் வடிகால் அமைக்காவிட்டால் புதிதாக போடப்படும் தார்சாலைகளும் சேதமடைந்து விடும். எனவே பொதுமக்களின் நலன் கருதி அப்பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைத்துதர வேண்டுமென்று அவ்வார்டு நகர்மன்ற உறுப்பினர் தெரிவித்ததைத்** |

| | |
|---|---|
| | தொடர்ந்து நகர்மன்ற தலைவர் நேரடி ஆய்வில் மேற்படி பணிகளை செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தியதன் பேரில் மேற்படி மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9,50,000/-க்கு நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு.</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் மூலம் மேற்கொள்ளலாம்.<br>**தீர்மானம் எண்.711, அனுமதிக்ககப்பட்டது** |
| பொருள்.3 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 30 ல் உள்ள விரிவாக்கப் பகுதிகளில் தெருவிளக்குகள் போதுமானதாக இல்லாத காரணத்தால் இரவு நேரங்களில் பொதுமக்கள் இருளில் மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும் மழைகாலங்களில் விஷஜந்துக்கள் வீடுகளுக்குள் புகுந்து விடுவதால் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலை உள்ளது. எனவே அப்பகுதிகளில் கூடுதல் தெருவிளக்குகள் அமைத்துதரக் கோரி அவ்வார்டு நகர்மன்ற உறுப்பினர் விண்ணப்பம் அளித்துள்ளதைத் தொடர்ந்து அப்பகுதியில் கூடுதல் தெருவிளக்குகள் அமைக்கவும் அவற்றிக்கு தேவையான பிட்டிங்குகள், கிளாம்பு, பைப்புகள் மற்றும் வயர் ஆகிய உதிரிப் பொருட்களை கொள்முதல் செய்வதற்கும், மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மதிப்பீட்டு கட்டணத்திற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.3,20,000/-க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொதுமக்களின் பாதுகாப்பு கருதி கூடுதல் தெருவிளக்குகள் அமைக்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி மூலம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.712, அனுமதிக்ககப்பட்டது** |
| பொருள்.4 | இந்நகராட்சிக்கு சொந்தமான பாம்புவிழுந்தான் உரக்கிடங்கில் உள்ள ஆழ்குழாய் கிணறு மோட்டார் பழுது காரணமாகவும், அப்பகுதியில் தேங்கிய மழைநீர் மற்றும் கழிவு நீர் மேற்படி ஆழ்குழாய் கிணற்றில் கலந்துவிட்ட காரணத்தாலும் பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் உள்ளது. மேற்படி உரக்கிடங்கில் எதிர்பாராதவிதமாக ஏற்படும் தீவிபத்துக்களை அந்த ஆழ்குழாய் கிணறு மூலமாக அணைக்கப்பட்டு வந்தது. கடந்த 15.09.2023 அன்று மேற்படி உரக்கிடங்கில் திடிரென்று தீப்பிடித்து விட்டதால் தீயணைப்பு |

| | |
|---|---|
| | வாகனங்கள் மூலம் தீயை அணைக்கும் முயற்சிகள் நடைபெற்றது. கூடுதலாக ஆழ்குழாய் கிணற்றினை சுத்தம் செய்து புதிய நீர்முழ்கி மோட்டார் இறக்கி பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கும், தீயை அணைப்பதற்கு புதிதாக ஓஸ் வாங்கவும் மேற்படி இடத்தை நேரடி ஆய்வு செய்த ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் தெரிவித்ததைத் தொடந்து பணி மேற்கொள்ள ஏற்படும் உத்தேச செலவினத் தொகை ரூ.1,30,000/- க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு மேற்படி பணியின் அவசர அவசியத்தைக் கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று இப்பணியை நகராட்சியில் பதிவு பெற்ற திரு,S.ரமேஷ்பாபு ஒப்பந்ததாரர் மூலம் ஒப்படைப்பு பணியாக மதிப்பீட்டு விலைவிகிதத்தில் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>அலுவலக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று இப்பணியை ஒப்படைப்பு பணியாக திரு,S.ரமேஷ்பாபு ஒப்பந்ததாரர் மூலம் மதிப்பீட்டு விலைவிகிதத்தில் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.713, அனுமதிக்ககப்பட்டது** |
| பொருள்.5 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 23-க்குட்பட்ட மேலச்சத்திரம் பகுதியில் உள்ள குறுக்குத்தெருக்களில் உள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் அப்பகுதி வாழ் மக்கள் தங்களின் இயல்பான போக்குவரத்திற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். மேற்படி சாலை குண்டும் குழியுமாக இருப்பதால் மழைகாலங்களில் அதிகளவில் நீர் தேங்கி சுகாதாரக்கேடு ஏற்படுகின்றது. இது தொடர்பாக அவ்வாடு நகர்மன்ற உறுப்பினர் அளித்துள்ள விண்ணப்பத்தின் அடிப்படையில் நகர்மன்றத்தலைவர் அவர்களின் நேரடி ஆய்வு அறிவுரையில் மேற்படி சாலையை பேவர்பிளாக் சாலையாக அமைக்க வலியுறுத்தியதன் பேரில் பேவர் பிளாக் சாலை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.5,30,000/-க்கு நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு.</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியை எதிர்வரும் ஏதாவது ஒரு திட்ட நிதியில் ஈடு செய்யும் பொருட்டு வருவாய் நிதி மூலம் மேற்கொள்ளலாம்.<br>**தீர்மானம் எண்.714, அனுமதிக்ககப்பட்டது** |

| | |
|---|---|
| பொருள்.6 | **இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட வார்டுகளின் நகர்மன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளின்படி சிறுமின்விசை பம்புடன் கூடிய சின்டெக்ஸ் தெட்டிகள் அமைத்துக்கொடுக்க கோரியதன்பேரில் நகர்மன்ற தலைவர் அவர்களின் பரிந்துரையின் பேரிலும் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.** |

| **வ.எண்** | **பணியின் விபரம்** | **மதிப்பீட்டித் தொகை (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1. | வார்டு எண் 8 க்குட்பட்ட பகுதியில் சிறுமின்விசை பம்புடன் கூடிய சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும பணி | 6.00 |
| 2. | வார்டு எண்.33 காமராஜர் நகர் குறுக்குதெரு பகுதியில் சிறுமின்விசை பம்புடன் கூடிய சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும பணி | 6.00 |

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் செலவு மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.715, அனுமதிக்ககப்பட்டது**

**தலைவர்**
**பரமக்குடி நகர்மன்றம்**